சித்தமருத்துவ வெளியீடு இலக்கம் 01

# சித்த மருத்துவத்தில் சரீர அமைப்பு

## நூலாய்வு




தொகுப்பு:

**தயாளினி** **நிருஷ்ணி** **கபாலினி** **கோகுலவாசினி**




9 789550 585359

மெகா பதிப்பகம், யாழ்

# சித்த மருத்துவத்தில் சீர அமைப்பு - நூலாய்வு

**தொகுப்பாசிரியர்கள்**

**தி.தயாளினி** BSMS(Jaffna), MPhil(Jaffna), PhD(Pera)
(தலைவர், சித்தமருத்துவ அலகு, யாழ் பல்கலைக்கழகம்)

**க.நிருஷ்ணி** BSMS(Jaffna)
(செய்முறை காட்டுனர், சித்தமருத்துவ அலகு,
யாழ் பல்கலைக்கழகம்)

**தி.கபாலினி** BSMS(Jaffna)
(செய்முறை காட்டுனர், சித்தமருத்துவ அலகு,
யாழ் பல்கலைக்கழகம்)

**வே.கோகுலவாசினி** BSMS(Jaffna)
(செய்முறை காட்டுனர், சித்தமருத்துவ அலகு,
யாழ் பல்கலைக்கழகம்)

**வெளியீடு**
சித்த மருத்துவ அலகு
யாழ் பல்கலைக்கழகம்
2020

| | | |
|---|---|---|
| நூலின் தலைப்பு | : | சித்த மருத்துவத்தில் சரீர அமைப்பு நூலாய்வு |
| சித்த மருத்துவ வெளியீடு | : | இல. 01 |
| தொகுப்பாசிரியர்கள் | : | தி.தயாளினி<br>க.நிருஷ்ணி<br>தி.கபாலினி<br>வே.கோகுலவாசினி |
| வெளியீடு | : | சித்த மருத்துவ அலகு<br>யாழ் பல்கலைக்கழகம் |
| பதிப்பு | : | முதலாம் பதிப்பு 2020 |
| பதிப்புரிமை | : | தொகுப்பாசிரியருக்கே |
| அச்சு | : | மெகா பிரின்ரர்ஸ் |
| ISBN | : | ISBN978-955-0585-35-9 |
| விலை | : | 200/- |

# பொருளடக்கம்


ஆசியுரை.................................................I

வாழ்த்துரை...................................................IV

முகவுரை.................................................VI

1. சரீர அமைப்பு ஓர் அறிமுகம் ........................ 1

1.1. சரீரம் - மறுபெயர்கள்................................ 3

1.2. சரீரம் - வரைவிலக்கணங்கள்........................ 5

2. சரீர அமைப்பின் வகைகள் ............................. 6

3. சரீர அமைப்பு வகைகளின் இலட்சணங்கள் ............8

3.1. வாத தேகியின் இலட்சணங்கள்........................8

3.2. பித்த தேகியின் இலட்சணங்கள்..................... 11

3.3. கப தேகியின் இலட்சணங்கள ....................... 14

3.4. வாதபித்த பிரகிருதியின் இலட்சணங்கள்..............17

3.5. வாத ஐய பிரகிருதியின் இலட்சணங்கள ............ 18

3.6. பித்த வாத பிரகிருதியின் இலட்சணங்கள்............19

3.7. பித்த ஐய பிரகிருதியின் இலட்சணங்கள்.......... 21

3.8. ஐய பித்த பிரகிருதியின் இலட்சணங்கள்..............23

3.9 ஐய வாத பிரகிருதியின் இலட்சணங்கள்............. 25

3.10. தொந்த பிரகிருதியின் இலட்சணங்கள் ................27

3.11. சன்னிபாத பிரகிருதியின் இலட்சணங்கள் .......... 28

4. அஷ்டவித பரீட்சைக்கும் சரீர இலட்சணத்திற்கும் இடையிலான தொடர்பு ................................. 29

5. தொகுப்புரை ............................................ 37

உசாத்துணை நூல்கள் ..................................... 40

## அட்டவணைகள்

அட்டவணை 01: சரீர அமைப்பின் மறுபெயர்கள்………...03

அட்டவணை 02: சரீர அமைப்பின் வகைகள் …………..06

அட்டவணை 03: வாத தேகியின் இலட்சணங்கள் ……...08

அட்டவணை 04: பித்த தேகியின் இலட்சணங்கள்……….11

அட்டவணை 05: கப தேகியின் இலட்சணங்கள்…………14

அட்டவணை 06: வாத பித்த பிரகிருதி இலட்சணங்கள்…17

அட்டவணை 07: வாத ஐய பிரகிருதி இலட்சணங்கள்…..18

அட்டவணை 08: பித்தவாத பிரகிருதி இலட்சணங்கள்........19

அட்டவணை 09: பித்த ஐய பிரகிருதி இலட்சணங்கள்…..21

அட்டவணை 10: ஐய பித்த பிரகிருதி இலட்சணங்கள்…..23

அட்டவணை 11: ஐய வாத பிரகிருதி இலட்சணங்கள்..….25

அட்டவணை 12: தொந்த பிரகிருதி இலட்சணங்கள்..........27

அட்டவணை 13: சன்னிபாத பிரகிருதி இலட்சணங்கள்…..28

அட்டவணை 14: அஷ்டவித பரீட்சைக்கும் சரீர இலட்சணத்திற்கும் இடையிலான தொடர்பு...30

அட்டவணை 15: பிரகிருதி மதிப்பீடு ……………………..31

# ஆசியுரை

“**சித்த மருத்துவத்தில் சரீர அமைப்பு - நூலாய்வு**” எனும் இந்நூலிற்கு ஆசியுரை வழங்குவதை இட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

சித்த மருத்துவத்தில் நோயாளிக்கு சரியான முறையில் சிகிச்சை முறைகளை மேற்கொள்வதற்கு சரீர அமைப்புப் பற்றிய தெளிவான அறிவு இன்றியமையாதது. அந்த வகையில் பல சித்த மருத்துவ நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள சரீர அமைப்புப் பற்றிய தகவல்களைத் தொகுத்து நூல்வடிவிலே இலகுவாக பார்வையிடக் கூடியதாக வெளியிடப்படுவது வரவேற்கத்தக்கதாகும்.

எந்தவொரு விடயத்தையும் முழுமையாக அறிந்து கொள்வதற்கு பல நூல்களையும் தொகுத்து ஆராய வேண்டியது அவசியமானதாகும். ஏனெனில் சில நூல்களில் ஒரு விடயத்தைப்பற்றிய ஒத்த கருத்துக்களும் சில நூல்களில் வேறுபட்ட கருத்துக்களும் காணப்படும்.

எனவே இவற்றைத் தொகுத்து ஒரே பார்வையில் வெளியிடுவதன் மூலம் சித்த மருத்துவத்துடன் தொடர்புடைய யாவரும் சரீர அமைப்புப் பற்றிய தெளிவான அறிவைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கையாகும். எனவே இந்நூலானது ஆய்வுகளை மேற்கொள்ளும் சித்த மருத்துவ மாணவர்கள், வைத்தியர்கள் மற்றும் சித்த மருத்துவ ஆர்வலர்கள் அனைவருக்கும் பெரும் உதவியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

சித்த மருத்துவத்தின் வளர்ச்சிக்கு இந்நூல் போன்ற பற்பல நூல்கள் நூலாய்வு செய்து வெளிவருவதன் மூலம் சித்த மருத்துவத்தினை பேணிக்காத்து அதன் வளர்ச்சிக்கு ஊன்று கோலாக அமையும் என்பது உறுதியாகும்.

எனவே இந்நூல் போன்ற நூல்கள் வெளிவர எனது ஆசிகளை வழங்கி தொன்மை சிறப்பு மிக்க சித்த மருத்துவத்தின் வளர்ச்சிக்கும் மீள் எழுச்சிக்கும் இறைவன் அருள் புரிவாராக.

டாக்டர். திருமதி .சி. பஞ்சராசா
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்த மருத்துவத்துறை
யாழ் பல்கலைக் கழகம்.

# ஆசியுரை

இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளிற்கு முன் தோன்றிய சித்தமருத்துவத்தின் மகத்தான தனித்துவத்தையும் சிறப்பையும் தற்கால தேவைகளிற்கு பொருந்தும் வகையில் தேர்ந்தறிந்து தமிழில் புத்தகம் வெளியிட முன்வந்திருக்கும் என் இனிய சித்தமருத்துவத்துறை வைத்தியர்களை நன்றியுடன் வாழ்த்துகின்றேன்.

மேலும் “ நோய்நாடி நோய்முதல்நாடி அது தணிக்கும்

வாய்நாடி வாய்ப்பச் செயல்”

என்னும் குறளின்படி நோய் நாடுவதற்கு ஏதுவான உடல் அமைப்பினை பிரகிருதி மட்டம் வரை ஆராய்ந்து எழுதியுள்ள இப்புத்தகம் சித்தமருத்துவத்தை சித்தமருத்துவமாகவே கையாளும் வைத்தியர்கட்கு சிறந்ததொரு அறிவுப்பெட்டகமாகும். இன்றைய நவீன யுகத்தின் மூலக்கூற்று, மரபியல், மருத்துவவியல் முறைகள் அனைத்துமே எமது பிரகிருதியின் அடிப்படை அறிவியலோடு ஒன்றிணைந்து காணப்படுகின்றமையை சித்த வைத்தியர்கள் மற்றும் மாணவர்கள் மேலும் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள், ஆய்வு வெளியீடுகளாக வெளிக்கொணர்வதற்கு இந்நூல் மிகச்சிறந்த ஆதாரமாக அமையும் என்பதை ஐயம் தெளிவுறக் கூறுவதுடன் இப்படைப்பை வெளியிடுவதில் எல்லாம் வல்ல இறைவனின் ஆசியும் உரித்தாகப் பிரார்த்திக்கின்றேன்.

வைத்தியர்.(திருமதி).றமீலாதேவி.தற்பரன்
BSMS,PG Dip in HDRP,MSc in Biochemistry and Molecular Biology.
பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுள்வேத ஆராய்ச்சி நிறுவகம்
சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

# வாழ்த்துரை

மனிதனின் பிறவிப்பிணி தீர்த்தலே சித்த மருத்துவத்தின் உள்ளார்ந்த வடிவமாகும். உடற்பிணி, உளப்பிணி தீர்த்தலுக்கு அப்பால் சமூக பொருளாதார, ஆன்மீக நன்னிலை பேணுதல் இம் மருத்துவத்தின் தொலைநோக்கு ஆகும். விஷேடமாக இலங்கையில் சுகாதார சேவை வழங்கலில் கிராமிய மட்டங்களுக்கான தேவைப்பாட்டின் ஏறத்தாழ 70 வீதமான தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய ஒரு மருத்துவம் என இதனை உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரை செய்துள்ளது.

இதற்கும் அப்பால் சித்த மருத்துவமானது நவீன மருத்துவத்தின் அணுகுமுறையில் இருந்து முற்றிலும் வேறுபட்ட அணுகுமுறை ஊடாக மருத்துவ சேவையினை வழங்கி வருவதால், அதற்கேயான சரீர அமைப்பு, செயற்பாடு தொடர்பில் தனித்துவமான அறிவும், ஆளுமையும் ஆழமாக அமைந்திருத்தல் மிகவும் அவசியமாகும். எனினும் மேலைத்தேய மருத்துவத்தின் அடிப்படையிலான சரீர அமைப்பு தொடர்பிலான அறிவானது, எமது அடிப்படைக் கல்வி முறையிலேயே போதிக்கப்பட்டிருப்பதும், சித்த மருத்துவ தத்துவத்தின் அடிப்படையில் கூறப்படும் சரீர அமைப்பும், செயற்பாடும் தொடர்பான விடயங்கள் வெளிப்படுத்தப்படும் உசாவுதல்கள் மிகவும் அரிதாக காணப்படுவதும் சித்த மருத்துவத்தின் ஆழமான வினைத்திறனை வெளிக்கொணர்வதில் பெருந்தடையாக அமைந்திருப்பது கவனத்திற் கொள்ள வேண்டிய அம்சமாகும்.

எனவே “சித்த மருத்துவத்தில் சரீர அமைப்பு” எனும் பெயரில் வெளியிடப்படும் இந் நூலாய்வானது மருத்துவர்களதும், மருத்துவ மாணவர்களதும் ஆளுமை வளர்ச்சியிலும், சித்த மருத்துவ வளர்ச்சியிலும் காத்திரமான பங்காற்றும் என்பதில் ஐயமில்லை. இப் புத்தக வெளியீட்டில் சிறந்த முறையில் வழிநடத்தியுள்ள யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவ பிரிவின் தலைவர் Dr.தி.தயாளினி அவர்களதும் இணைந்து செயலாற்றியுள்ள சித்த மருத்துவ பிரிவின் செயன்முறை காட்டுனர்களாகிய Dr. திருமதி. க. நிருஷ்ணி, Dr. திருமதி. தி. கபாலினி, Dr. செல்வி. வே.கோகுலவாசினி அவர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

Dr. (திருமதி.) சி.துரைரட்ணம்.

மாகாணஆணையாளர்

சுதேசமருத்துவத் திணைக்களம்.

வடமாகாணம்.

# முகவுரை

மனிதன் உலகிலுள்ள ஐம்பெரும் பூதங்களினால் உருவாக்கப்பட்ட சிறியதோர் உலகம் என அறியத்தக்கவன். மனித உடலிலுள்ள ஒவ்வோர் உறுப்பும் வையகத்திலுள்ள சில தத்துவங்களின் பொதுவான சில சக்தியால் உண்டானது. மனிதனிடம் மட்டுமே சடப்பொருட்களில் வாய்ந்துள்ள சக்திமுதல் ஈசன்பால் நிரம்பியுள்ள சக்திவரை அனைத்து சக்திகளும் மறைந்து கிடக்கின்றன எனும் உண்மை மறுத்தற்பாலதன்று. எனவேதான் அண்டத்திலுள்ள எல்லாப் பொருட்களும் சூக்கும நிலையில் மனிதனினுள் அமைந்து கிடக்கின்றன என்பது ஞானிகளின் துணிபு.

மனிதனின் குணங்கள் பிண்டத்தின் பெற்றோர் குணத்தையும் சுற்றியுள்ள தன்மைகளையும் பொறுத்துள்ளது. காலத்தினால் உண்டாகும் மாறுதல்கள், கருத்தரிக்கும் விதம், கருப்பையில் ஏற்படும் வளர்ச்சி, தாயின் உணவுப்பழக்க வழக்கங்கள், பிண்டத்தை உற்பத்தி செய்யும் பஞ்ச பூதங்களின் சேர்க்கைத்தன்மை, தாய்தந்தையரின் வாத, பித்த, கப தன்மைகளின் சம்பந்த மிகுதி முதலியவற்றைப் பொறுத்தே குழந்தையின் உற்பத்தியும் பிறவிக்குணங்களும் வாத, பித்த, கபமாகவும் அவற்றின் தொந்தங்கள் மூலிதத் தன்மைகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றையே பிரகிருதிகள் என ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.

உடலில் குணவாதி செயல்களால் முக்குற்றங்களில் எது மிகுதிப்பட்டு சுக்கில சுரோணிதத்துடன் கலக்கின்றதோ

அக்குற்றமே முதற்காரணமாயிருந்து சரீர அமைப்பை உருவாக்கும். அமைக்கப்பட்ட உடலானது குற்ற மிகுதியின் பெயரால் அழைக்கப்படும். வாத,பித்த, கப மிகுதியால் உண்டாக்கப்பட்ட சரீரம் முறையே வாத பிரகிருதி, பித்த பிரகிருதி, கப பிரகிருதி என வழங்கப்படும். இதனை முறையே அதம, மத்திம, உத்தம பிரகிருதிகள் என்றும் வழங்கப்படும்.

சித்த மருத்துவத்தில் நோயை நிதானித்து சிகிச்சை முறையை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு சரீர அமைப்பு பற்றிய தெளிவான அறிவு மிகவும் அவசியமாகின்றது. சிகிச்சை முறையை வெற்றிகரமாக முன்னெடுப்பதன் மூலமாகவே சித்த மருத்துவத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல முடியும் என்பதில் ஐயமெதுவுமில்லை. எனவே எமக்கு கிடைக்கப் பெற்ற ஆய்வு நூல்களில் இருந்து சரீர அமைப்பின் வேறு பெயர்கள், வரைவிலக்கணம், வகைகள், வாத,பித்த, கப, தொந்த, சன்னி பாத பிரகிருதிகளின் இலட்சணங்கள் என்பன ஆய்விற்குட்படுத்தி தொகுத்து எளிய முறையில் இலகுவாகப் பார்வையிடக் கூடியதாக தொகுக்கப்பட்டுள்ளது. இந்நூலானது சித்த மருத்துவத்துடன் தொடர்புடைய அனைவருக்கும், பொதுமக்களுக்கும் உபயோகமானதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இதனை நூலாக வெளியிட எமக்கு உந்து சக்தியை வழங்கிய இறைவனுக்கும் எமது சித்தர் பெருமக்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

Dr.தி.தயாளினி

(சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவ அலகு யாழ் பல்கலைக்கழகம்)

Dr.திருமதி.க.நிருஷ்ணி

(செய்முறை காட்டுனர், சித்தமருத்துவ அலகு, யாழ் பல்கலைக்கழகம்)

Dr.திருமதி.தி.கபாலினி

(செய்முறை காட்டுனர், சித்தமருத்துவ அலகு, யாழ் பல்கலைக்கழகம்)

Dr.செல்வி.வே.கோகுலவாசினி

(செய்முறை காட்டுனர், சித்தமருத்துவ அலகு, யாழ் பல்கலைக்கழகம்)

# 1. சரீர அமைப்பு - ஓர் அறிமுகம்

உலகில் வாழும் மானிடர்கள் அனைவரும் சரீர அமைப்பின் அடிப்படையில் தனிச் சிறப்பான தோற்ற அமைப்புடனும் பல்வேறுபட்ட செயற்றிறனுடனும் காணப்படுகின்றனர். இத்தகைய சரீர அமைப்பானது கரு உற்பத்தியில் ஆண் பெண் சுக்கில சுரோணிதங்கள் ஒன்றுடன் ஒன்று கலந்து உருவாகுகையிலே தீர்மானிக்கப்பட்டு விடுகின்றன.

சித்த மருத்துவத்தில் சரீர அமைப்பானது மிக முக்கியமானதாகக் கருதப்படுவதற்கு காரணம் யாதெனில் சரீர அமைப்பானது வாத , பித்த, கப தோஷங்களின் அடிப்படையில் உருவாக்கப்படுவதுடன் இம் மூன்று தோஷங்களும் கலப்புறும் அளவிற்கேற்ப தொந்த, சன்னிபாத சரீர அமைப்புக்களாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் சித்தமருத்துவத்தில் நோய்களும் வாத, பித்த, கப சம்பந்தமான நோய்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே வாத சரீர அமைப்பை உடைய தேகிக்கு வாத சம்பந்தமான நோய்கள் தாக்கும் போது அதன் வீரியம் அதிகமாக இருக்கும். அத்துடன் அதன் சிகிச்சையும் கடினமானதாக அமையும் எனவே சித்த மருத்துவத்தில் வெற்றிகரமாக நோயை நிதானித்து சிகிச்சை வழங்குவதற்கு சரீர அமைப்புப்பற்றிய அறிவு இன்றியமையாதது.

சரீர அமைப்புப்பற்றிய ஆய்விற்காக 10 சித்த மருத்துவ நூல்களும் 2 ஆயுள்வேத நூல்களும் எடுத்துக் கொள்ளப்பட்டு அவற்றில் உள்ள கருத்துக்களை மாற்றம் எதுவும் செய்யாது சரீர அமைப்பின் மறு பெயர்கள், வரைவிலக்கணம், வகைகள், தேகி இலட்சணங்கள் என்பன தொகுக்கப்பட்டு எளிய வடிவில் பார்வையிடக்கூடியதாக உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு நோயாளியை பார்த்தவுடன் சரீர அமைப்பைத் தீர்மானித்து சிகிச்சை வழங்குவதில் ஆரம்பகால சித்த வைத்தியர்கள் கைதேர்ந்தவர்களாகக் காணப்பட்டனர். எனினும் தற்காலத்தில் அத்தகைய அனுபவ அறிவு

குறைவடைந்து செல்வதனால் சரீர அமைப்புப்பற்றிய நூலை வெளியிட வேண்டியது காலத்தின் தேவையாய் உள்ளது. எனவே சித்தமருத்துவ வைத்தியர்கள், மாணவர்கள், ஆர்வலர்கள் யாவரும் பயனுறும் வகையில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

## 1.1. சரீரம் - மறுபெயர்கள்

ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட 12 நூல்களிலிருந்து சரீர அமைப்பின் மறுபெயர்கள் தொகுத்து அட்டவணை 01ல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 01 : சரீர அமைப்பின் மறுபெயர்கள்**

| மறுபெயர்கள் | சித்த மருத்துவ நோய்நாடல் நோய்முதல் நாடல் திரட்டு | நாடி தர்ப்பணம் | அஷ்டாங்க சங்கிரகம் | | சாரங்கதர ஸம்ஹிதை | பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம் | வைத்திய சிந்தாமணி | அகத்தியர் இரண்டாயிரம் | தன் வந்திரி வைத்தியம் | அங்காதிபாதம் எனும் சித்த வைத்திய அரிச்சுவடி | சித்த மருத்துவாங்க சுருக்கம் | ஜீவரக்ஷாமிர்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேகி இலக்கணம் | ❖ | | | | | | | | | | | ❖ |
| தேகக் குறி | ❖ | | | | | ❖ | ❖ | | | | | |
| பிரகிருதி | | ❖ | ❖ | ❖ | ❖ | | | ❖ | | | | |
| சரீர அமைப்பு | | | | | | | | ❖ | | | | |
| சரீரக் கூறு | | | | | | | | ❖ | | | | |
| தேகக் கூறு | | | | | | | | ❖ | | | | |
| சரீரக் குணம் | | | | | | | | | ❖ | ❖ | | |
| தேக லஷணம் | | | | | | | | | ❖ | | | |
| உடலினன் இயல் | | | | | | | | | | | ❖ | ❖ |

ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட பன்னிரண்டு நூல்களில் பிரகிருதி என்ற பெயரானது நான்கு நூல்களிலும் தேகக்குறி என்ற பெயரானது மூன்று நூல்களிலும் தேகி இலக்கணம் , சரீரக்குணம் என்ற பெயர்களானது இவ்விரண்டு நூல்களிலும் சரீர அமைப்பு சரீரக்கூறு, தேகக்கூறு, என்றும் பெயர்களானது அகஸ்தியர் இரண்டாயிரத்திலும் தேக லஷணம் என்ற பெயரானது தன்வந்திரி வைத்தியம் என்ற நூலிலும் உடலினன் இயல் என்ற பெயரானது சித்த மருத்துவாங்கச் சுருக்கத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

- அகஸ்தியர் வயித்திய காவியம் எனும் நூலின் கீழ் தேக அமைப்பிற்கு பெயர் குறிப்பிடப்படாது பின்வரும் பாடல் மூலம் நிறத்தை அடிப்படையாக வைத்து மூன்று வகைகளாக கூறப்பட்டுள்ளது.

**<u>வாத, பித்த, சேத்தும நிறம்</u>**

மூன்று பேர் நிறமுஞ் சொல்வேன் முதல் வாதங் கறுப்பு செம்மை

மான்றிய பசுமை பச்சை மஞ்சளாயிருக்கும் பித்தம்

தோன்றிய வெண்மையப்பா சோர்விலாவையமாகும்

ஊன்றிய நிறங்கள் சென்னேனுத்த மரறிவர்தானே.

## 1.2. சரீரம் - வரைவிலக்கணங்கள்

* அஷ்டாங்க சங்கிரகம் எனும் நூலில்

உயிரை நீக்கும் இயல்புள்ள நச்சில் தோன்றிய புழுவானது அந்த விடத்தினால் அழிவதில்லை அதே போல் ஆண், பெண் புணர்ச்சியால் வாத, பித்த, கப எழுச்சியை கொண்ட விந்து சோணிதங்களால் ஏற்படும் உடல் வாத, பித்த, கபம் எனும் மூன்று பிரகிருதிகளாக ஆகின்றன. எனக் கூறப்பட்டுள்ளது.

* நாடி தர்ப்பணம் எனும் நூலில்

வாதப் பிரகிருதி, பித்தப் பிரகிருதி, சிலேஷ்மப் பிரகிருதி இவைகள் ஸ்திரி, புருஷர்களுற்கு சுரோணிதத்திலும், சுக்கிலத்திலும் சேர்ந்த தன்மை கருப்ப உற்பத்திக் காலத்தில் வாத, பித்த, சிலேஷ்மங்கள் தங்களுக்குரிய கிரமமான மாத்திரையின் படி சேர்ந்து விரோதமில்லாமல் இணங்கியிருந்தால் உத்தமப் பிரகிருதி என்றும் அவற்றில் இரட்டித்த தன்மை ஈனப் பிரகிருதி என்றும் அவைகள் இரட்டித்த தன்மையீனம் மத்திமப் பிரகிருதி என்றும் கூறப்பட்டுள்ளது.

- ❖ ஆய்விற்காக எடுக்கப்பட்ட ஏனைய நூல்களில் வரைவிலக்கணம் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

# 2. சரீர அமைப்பின் வகைகள்

ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட 12 நூல்களிலிருந்து சரீர அமைப்பின் வகைகள் தொகுக்கப்பட்டு அட்டவணை 02ல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 02 : சரீர அமைப்பின் வகைகள்**

| இலக்கம் | வகைகள் | சித்த மருத்துவ நோய்நாடல் நோய்முதல் நாடல் திரட்டு | நாடி தர்ப்பணம் | அஷ்டாங்க சங்கிரகம் | சார்ங்கதர ஸம்ஹிதை | பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம் | வைத்திய சிந்தாமணி | அகத்தியர் இரண்டாயிரம் | அகஸ்தியர் வயித்திய காவியம் | தன் வந்திரி வைத்தியம் | அங்காதிபாதம் எனும் சித்த வைத்திய அரிச்சுவடி | சித்த மருத்துவாங்க சுருக்கம் | ஜீவரக்ஷாமிர்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வாத பிரகிருதி | + | + | + | + | + | + | + | + | + | + | + | + |
| 2 | பித்த பிரகிருதி | + | + | + | + | + | + | + | + | + | + | + | + |
| 3 | கப / ஐய / சிலேற்பன பிரகிருதி | + | + | + | + | + | + | + | + | + | + | + | + |
| 4 | வாத பித்த பிரகிருதி | + | | | | + | + | | | | | | |
| 5 | வாத ஐய பிரகிருதி | + | | | | + | + | | | | | | |
| 6 | பித்த வாத பிரகிருதி | + | | | | + | + | | | | | | |
| 7 | பித்த ஐய பிரகிருதி/ பித்த சேத்தும பிரகிருதி | + | | | | + | + | | | | | | |
| 8 | ஐய பித்த பிரகிருதி/ சிலேற்பன பித்தம் | + | | | | + | + | | | | | | |
| 9 | ஐய வாத பிரகிருதி | + | | | | + | + | | | | | | |

இங்கு வாத, பித்த, கப பிரகிருதிகள் 12 நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் வாதபித்த, வாதஐய, பித்தவாத, ஐயபித்த, ஐயவாத பிரகிருத்திகளானது மூன்று நூல்களிலும் சன்னி பாத பிரகிருதியானது சித்த மருத்துவாங்கச் சுருக்கம் எனும் நூலிலும் வகைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

நாடிதர்ப்பணம் என்னும் நூலில் உத்தம, மத்திம, ஈனப் பிரகிருதி எனும் இன்னொரு வகைப்பாடு கூறப்பட்டுள்ளது. இதனையே அஷ்டாங்க சங்கிரகம் எனும் நூலானது

வாதப் பிரகிருதி - ஈனமானது

பித்தப் பிரகிருதி - மத்திமமானது

கபப்பிரகிருதி - உத்தமமானது எனக் கூறுகின்றது.

# 3. சரீர அமைப்பு வகைகளின் இலட்சணங்கள்

## 3.1. வாத தேகியின் இலட்சணங்கள்

ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட 12 நூல்களில் வாத தேகியின் 46 இலட்சணங்கள் 10 நூல்களில் இருந்து தொகுத்து அட்டவணை 03ல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 03 : வாத தேகியின் இலட்சணங்கள்**

| இலக்கம் | வாததேகியின் இலட்சணங்கள் | சித்த மருத்துவ நோய்நாடல் நோய்முதல் நாடல் திரட்டு | சார்ங்கதர ஸம்ஹிதை | பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம் | வைத்திய சிந்தாமணி | அகத்தியர் இரண்டாயிரம் | அகஸ்தியர் வயித்திய காவியம் | தன் வந்திரி வைத்தியம் | அங்காதிபாதம் எனும் சித்த வைத்திய அரிச்சுவடி | சித்த மருத்துவாங்க சுருக்கம் | ஜீவரக்ஷாமிர்தம் | இலட்சணங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தேகம் கருமை | + | | + | + | | + | | | | | 04 |
| 2 | தேகத்தில் வாய்வுப் பெருக்கம் | + | | | + | | | + | | | | 03 |
| 3 | தேகவுளைச்சல் , உடல்கடுப்பு | + | | | + | | | + | | | | 03 |
| 4 | தேக மெலிவு | | + | + | | + | | | | | | 03 |
| 5 | கடினம் (தேகம்) | + | | | + | | | | | | | 02 |
| 6 | தடிப்பு (தேகம்) | + | | | + | | | | | | | 02 |
| 7 | சிற்றின்பக் காதல் | + | | | + | | | | | | | 02 |
| 8 | தாது நஷ்டம் | + | | | + | | | | | | | 02 |
| 9 | அன்னம் செல்லாமை | + | | | + | | | | | | | 02 |
| 10 | மிக சொற்பமான கேசம் | | + | | | + | | | | | | 02 |
| 11 | வறட்சியுள்ள தேகம் | | + | | | + | | | | | | 02 |
| 12 | மிதமிஞ்சி பேசும் | | + | | | + | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தன்மை | | | | | | | | | | | 02 |
| 13 | சபல சித்தம் | | + | | | + | | | | | | 02 |
| 14 | ஆகாயத்தில் சஞ்சரிப்பதாகக் கனவு காணும் தன்மை , அடிக்கடி செப்பனம் | | + | | | + | | | | | | 02 |
| 15 | பொய்யுடன் மெய்கலந்து பேசுதல் | | | + | | + | | | | | | 02 |
| 16 | உஷ்ணத்தில் பிரியம் | | | | | + | | | | | + | 02 |
| 17 | உடலில் குளிர்ச்சி உண்டாகும் | | | | | | | + | + | | | 02 |
| 18 | உடல் வெப்பம் | | | | | | | | + | + | | 02 |
| 19 | உடல் சோருதல் | | | | | | | + | + | | | 02 |
| 20 | உயர்ந்ததேகம் | | | | | | | | | + | + | 02 |
| 21 | பருத்த அடித்தொடை | | | | | | | | | + | + | 02 |
| 22 | நடந்தால் கீல்களில் நெட்டியிடல் | | | | | | | | | + | + | 02 |
| 23 | தடித்த இமையுடன் விகாரித்த சாக்கண் | | | | | | | | | + | + | 02 |
| 24 | வெண்மை கலந்த கண், குளிர்ந்த பார்வை | | | | | | | | | + | + | 02 |
| 25 | வெண்மை, கருமை கலந்த சரீரம் | | | | | | | | | + | + | 02 |
| 26 | கறுத்து முனைபிளந்த தலைமயிர் | | | | | | | | | + | + | 02 |
| 27 | தெளிவான வார்த்தை | | | | | | | | | + | + | 02 |
| 28 | தித்திப்பு, புளிப்பு, உப்பு, சூடு, இச்சை | | | | | | | | | + | + | 02 |
| 29 | சீதள வஸ்துவில் விரோதம் | | | | | | | | | + | + | 02 |
| 30 | விஷேஷவுண்டி எனினும் அற்ப பலன் | | | | | | | | | + | + | 02 |
| 31 | மாதரிடத்தில் அற்ப இச்சை | | | | | | | | | + | + | 02 |
| 32 | கேள்விலாசம், சங்கீதம், வேட்டையாடலில் இச்சை | | | | | | | | | + | + | 02 |
| 33 | அயோக்கிதை | | | | | | | | | + | + | 02 |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மாச்சரியம் லோபம், பொன் வஸ்துகளை அபகரிக்கும் நினைப்பு | | | | | | | | | | | |
| 34 | அரைக் கண் மூடிய சொற்ப நித்திரை | | | | | | | | | + | + | 02 |
| 35 | புத்திர பெருக்கம் | | | | | | | | | + | + | 02 |
| 36 | கீர்த்தியின்மை | | | | | | | | | | + | 01 |
| 37 | சுறுசுறுப்பு | | | | | | | | | | + | 01 |
| 38 | உடல் தூண் போல பெருத்தல் | | | | | | | | + | | | 01 |
| 39 | சம ஒலி | | | | | | | | | + | | 01 |
| 40 | பசி அதிகம் இருத்தல் | | | | | | | + | | | | 01 |
| 41 | கார்ப்பில் அதிக இச்சை | | | | | | | + | | | | 01 |
| 42 | பிறர் விரும்பாத கருமத்தில் கவனம் செலுத்துதல் | | | | | | | | + | | | 01 |
| 43 | துவர்ப்பு அதிகமுண்ணல் | | | + | | | | | | | | 01 |
| 44 | கானமருங் குழலார் மேல் மிகுந்த ஆசை | | | + | | | | | | | | 01 |
| 45 | கடிந்த மொழி | | | + | | | | | | | | 01 |
| 46 | முன் கோபம் | | | + | | | | | | | | 01 |

தேகம் கருமை எனும் இலட்சணமானது 04 நூல்களிலும் தேகத்தில் வாய்வுப் பெருக்கம், தேகவுளைச்சல் , உடல்கடுப்பு ஆகிய இலட்சணங்கள் மூன்று நூல்களிலும் தேக மெலிவு என்னும் இலட்சணமானது மூன்று நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் ஏனைய மேற்கூறப்பட்ட வாத தேகியின் இலட்சணங்கள் தலா இவ்விரண்டு, ஒவ்வொரு நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 3.2. பித்த தேகியின் இலட்சணங்கள்

ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட 12 நூல்களில் பித்த தேகியின் 40 இலட்சணங்கள் 10 நூல்களில் இருந்து இனம் காணப்பட்டு அட்டவணை 04ல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 04 : பித்த தேகியின் இலட்சணங்கள்**

| இலக்கம் | பித்த தேகியின் இலட்சணங்கள் | சித்த மருத்துவ நோய்நாடல் நோய்முதல் நாடல் திரட்டு | சார்ங்கதர ஸம்ஹிதை | பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம் | வைத்திய சிந்தாமணி | ஒகத்தியர் இரண்டாயிரம் | ஒகஸ்தியர் வயித்திய காவியம் | தன் வந்திரி வைத்தியம் | ஒங்காதிபாதம் எனும் சித்த வைத்திய ஒரிச்சுவடி | சித்த மருத்துவாங்க சுருக்கம் | ஜீவரக்ஷாமிர்தம் | இலட்சணங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பல கலைகளையும் கற்றல் | + | | + | + | + | | | + | + | | 06 |
| 2 | தேக மெலிவு | | | + | | + | | + | + | + | + | 06 |
| 3 | அளவு கடந்த போகம் | | | | + | + | | + | + | + | + | 06 |
| 4 | அற்ப உண்டி | + | | + | + | | | + | | + | | 05 |
| 5 | தைரியம், வீரம் | + | | + | | + | | | | + | + | 05 |
| 6 | பெரியோர்களிடத்து மதிப்பு | + | | + | + | | | | | + | + | 05 |
| 7 | வாலிப வயதில் நரை | | + | | | + | | | + | + | + | 05 |
| 8 | தேகநிறம் வெண்மை | + | | + | + | | | | + | | | 04 |
| 9 | புளிப்பு சுவையில் அதிகப் பிரியம் | + | | + | + | | | + | | | | 04 |
| 10 | மதியில் சிறப்பு | | + | + | | | | | | + | + | 04 |
| 11 | அடிக்கடி வியர்த்தல் | | + | | | + | | | | + | + | 04 |
| 12 | கனவு – பல ஒளியுள்ள | | + | | | | | + | | + | + | 04 |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | உருவைக் காணல் | | | | | | | | | | | |
| 13 | உடல் காங்கை | | | | | | | + | + | + | + | 04 |
| 14 | மனக்குழப்பம் | + | | | + | | | | | + | | 03 |
| 15 | வெகு ரோஷம் | | | | | | | | | | | 03 |
| 16 | புத்தி குழம்பித் தேறல் / பயித்தியம் | | | | | | | | | | | 03 |
| 17 | கடைக்கண் சிவத்தல் | | | | | + | | | | + | + | 03 |
| 18 | அளவு கடந்த தேக வறட்சி | + | | | + | | | | | | | 02 |
| 19 | சொற்ப நித்திரை | + | | | + | | | | | | | 02 |
| 20 | இதமான வார்த்தை பேசுதல் | | | | | + | | | + | | | 02 |
| 21 | செம்மை மஞ்சள் தேக நிறம் | | | | | | | | | + | + | 02 |
| 22 | சருமம் சுருங்கித் திரைதல் | | | | | | | | | + | + | 02 |
| 23 | அற்ப காமம் | | | | | | | | | + | + | 02 |
| 24 | உள்ளங்கை உள்ளங்கால் சிவப்பு, சிறுக மஞ்சள்வண்ணம் | | | | | | | | | + | + | 02 |
| 25 | மெல்லிய இமை | | | | | | | | | + | + | 02 |
| 26 | தேகத்தில் சொற்ப ரோமம் | | | | | | | | | + | + | 02 |
| 27 | மஞ்சள் வண்ண சிர கேசம் | | | | | | | | | + | + | 02 |
| 28 | முகப்பரு + கறுத்த மச்சங்கள் | | | | | | | | | + | + | 02 |
| 29 | தித்திப்பு துவர்ப்பு கசப்பு சீதளத்தில் விருப்பு | | | | | | | | | + | + | 02 |
| 30 | பசி, தாகம், கோபம், உஷ்ணம், கிலேசம் போன்றன சகிக்காத தன்மை | | | | | | | | | + | + | 02 |
| 31 | சுகந்த மாலை, பூச்சு, அலங்காரத்தில் விருப்பு | | | | | | | | | + | + | 02 |
| 32 | மிகு வார்த்தை | | | | | | | | | | + | 01 |
| 33 | அற்ப சுக்கிலம் | | | | | | | | | + | | 01 |
| 34 | பொய் பேசுதல் | | | | | + | | | | | | 01 |
| 35 | தேகம் பசுமை, பச்சை மஞ்சள் | | | | | | + | | | | | 01 |
| 36 | வெயிலில் | | | | | | | + | | | | 01 |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சஞ்சரிக்க மாட்டார்கள் | | | | | | | | | | | |
| 37 | மலம் இறுகிப் போதல் | | | | | | | | + | | | 01 |
| 38 | தன் காரியத்தில் கூடிய கவனம் | | | | | | | | + | | | 01 |
| 39 | உயர்ந்த ஒலி | | | | | | | | | + | | 01 |

மேற்படி 10 நூல்களில் தேக மெலிவு என்னும் இலட்சணமானது 06 நூல்களிலும் அளவு கடந்த போகமானது 06 நூல்களிலும் பல கலைகளையும் கற்கும் இலட்சணமானது 06 நூல்களிலும் கூறப்பட்டுள்ளதுடன் 05 நூல்களில் அற்பவுண்டி, பெரியோர்களிடத்தில் மதிப்பு, தைரியம், வீரம், வாலிப வயதில் நரை கூறப்பட்டுள்ளதுடன் 04 நூல்களில் தேக நிறம் வெண்மை, புளிப்பு சுவையில் அதிக பிரியம், மதியில் சிறப்பு அடிக்கடி வியர்த்தல், உடல் காங்கை, கனவு – பல ஒளியுள்ள உருவைக் காணுதல் கூறப்பட்டுள்ளதுடன் ஏனைய லட்சணங்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கூறப்பட்டுள்ளன.

## 3.3. கப தேகியின் இலட்சணங்கள்

ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட 12 நூல்களில் கப தேகியின் 33 இலட்சணங்கள் 09 நூல்களில் இருந்து இனம் காணப்பட்டு அட்டவணை 05ல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 05 : கப தேகியின் இலட்சணங்கள்**

| இலக்கம் | கப தேகியின் இலட்சணங்கள் | சித்த மருத்துவ நோய்நாடல் நோய்முதல் நாடல் திரட்டு | சார்ங்கதர ஸம்ஹிதை | பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம் | வைத்திய சிந்தாமணி | அகத்தியர் இரண்டாயிரம் | தன் வந்திரி வைத்தியம் | சித்த மருத்துவாங்க சுருக்கம் | ஜீவரக்ஷாமிர்தம் | இலட்சணங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தேகம் கொழுமை | + | + | | + | + | | + | + | 06 |
| 2 | தேகம் சிவப்பு | + | | + | + | | | + | + | 05 |
| 3 | வியர்த்தல் | + | | + | + | | | + | | 05 |
| 4 | குமறலான குரலோசை / வானிடி குரலோசை | + | | + | + | | | + | | 05 |
| 5 | அடக்க ஒடுக்கம் / வணக்கம் | + | | + | + | | | | | 05 |
| 6 | மோகம் | + | | + | + | | | | | 04 |
| 7 | பொய்யை மெய் போல பேசுதல் | + | | + | + | | | | | 04 |
| 8 | இனிப்பு சுவையில் பிரியம் | + | | + | + | | | | | 04 |
| 9 | கம்பீர கொள்கை | | | | | | + | + | | 04 |
| 10 | செழிப்பான தலைமயிர் | | | | | + | | + | | 04 |
| 11 | கனவு (நீரோடைகளைக் காணல்) | | + | | | | | + | + | 03 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | ஞாபக சக்தி, மேலான புத்தி, முன்கோபம், நம்பிக்கை, சத்தியம், பொறுமை, நாணம், நன்றி மறவாத தன்மை. | | | | | + | | + | + | 03 |
| 13 | காய்ச்சல், காசம், இருமல், கோழை | | | + | | | | | | 02 |
| 14 | அற்ப பசி | | | + | | | | | + | 02 |
| 15 | உடல் வெண்மை | | | | | | | + | | 02 |
| 16 | லஷ்மி கடாட்சம் | | | | | + | | + | | 02 |
| 17 | உபசரிக்கும் தன்மை | | | | | | | + | | 02 |
| 18 | பரந்த நெற்றி, அகன்று உயர்ந்த மார்பு, முழங்கால் அளவு நீண்ட கை | | | | | | | + | + | 02 |
| 19 | அகன்று நீண்ட கண், கடை சிவந்து கருவிழி வெண் விழி நெருங்கிய இமையுடன் மினுமினுத்துக் காணப்படும் | | | | | | | + | + | 02 |
| 20 | மதத்த யானை ஒத்த நடை | | | | | | | + | + | 02 |
| 21 | கசப்பு, துவர்ப்பு, உஷ்ணம் இவைகளில் அதிக விருப்பம் | | | | | | | + | + | 02 |
| 22 | அற்பவுண்டி எனினும் அதிக பலன் | | | | | | | + | + | 02 |
| 23 | தூக்கம், தாகம், கிலேசம், உஷ்ணம் இவைகளிற்குப் பின் வாங்காத தன்மை | | | | | | | + | + | 02 |
| 24 | கோபம், கடுஞ்சொல், சபலபுத்தி, தீர்க்க வயிரம், அதிவிஷயம், அதிக தாகம் இன்மை. | | | | | | | + | + | 02 |
| 25 | சத்துவ குணம் | | | | | | | + | + | 02 |
| 26 | சுக நித்திரை | | | | | | | + | + | 02 |
| 27 | ஸ்திரிகளிடத்தில் இச்சை | | | | | + | | | | 01 |
| 28 | பொய், திருட்டு இல்லாமை | | | | | + | | | | 01 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 29 | **உடல் திமிர்த்தல்** | | | | | | | | | 01 |
| 30 | **கலகலப்பு, சந்தோசம்** | | | | | + | | | | 01 |
| 31 | **உடல் தட்பம்** | | | | | | | + | | 01 |
| 32 | **இனிமையான குரலோசை** | | | | | | | + | | 01 |
| 33 | **கறுத்து நெருங்கி முளைத்த ரோமம்** | | | | | | | | + | 01 |

தேகம் கொழுமை என்னும் இலட்சணமானது 06 நூல்களிலும் 05 நூல்களின் முறையே தேகச் சிவப்பு, குமறலான குரலோசை, அடக்க ஒடுக்கம், வணக்கம் என்னும் நூல்களிலும், வியர்த்தல் என்னும் நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் 04 நூல்களில் முறையே மோகம், பொய்யை மெய் போல பேசுதல, இனிப்பு சுவையில் பிரியம், கம்பீரக் கொள்கை, செழிப்பான தலைமயிர் கூறப்பட்டுள்ளதுடன் ஏனைய இலட்சணங்கள் மேற்கூறப்பட்டுள்ள அட்டவணையின்படி குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3.4. வாத பித்த பிரகிருதியின் இலட்சணங்கள்

ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட 12 நூல்களில் வாதபித்த தேகியின் 08 இலட்சணங்கள் 02 நூல்களில் இருந்து இனம் காணப்பட்டு அட்டவணை 06ல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 06 : வாத பித்த பிரகிருதி இலட்சணங்கள்**

| இலக்கம் | வாத பித்த பிரகிருதி இலட்சணங்கள் | சித்த மருத்துவ நோய்நாடல் நோய்முதல் நாடல் திரட்டு | வைத்திய சிந்தாமணி | இலட்சணங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | தேக மெலிவு | + | + | 02 |
| 2 | கருமை நிற தேகம் | + | + | 02 |
| 3 | பொய்யும் மெய்யும் கலந்து பேசுதல் | + | + | 02 |
| 4 | மைத்துன அபேட்சை | + | + | 02 |
| 5 | அறிவின்மை | + | + | 02 |
| 6 | முன்கோபம் | + | + | 02 |
| 7 | காரம், துவர்ப்பு சுவையில் விருப்பம் | + | + | 02 |
| 8 | கடினமொழி | + | | 01 |

கடின மொழி என்னும் இலட்சணமானது வைத்திய சிந்தாமணி என்னும் நூலில் குறிப்படப்படாது சித்த மருத்துவ நோய் நாடல் நோய்முதல் நாடல் திரட்டு என்னும் நூலில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

### 3.5. வாத ஐய பிரகிருதியின் இலட்சணங்கள்

ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட 12 நூல்களில் வாதஐய தேகியின் 09 இலட்சணங்கள் 02 நூல்களில் இருந்து இனம் காணப்பட்டு அட்டவணை 07ல் காட்டடப்பட்டுள்ளது.

**அட்டவணை 07 : வாத ஐய பிரகிருதி இலட்சணங்கள்**

| இலக்கம் | வாத ஐய பிரகிருதி இலட்சணங்கள் | சித்த மருத்துவ நோய்நாடல் நோய்முதல் நாடல் திரட்டு | வைத்திய சிந்தாமணி | இலட்சணங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | தேகம் - தடிப்பு | + | + | 02 |
| 2 | மதம் கொண்ட யானை போல அசைந்து நடத்தல் | + | + | 02 |
| 3 | செம்மை நிறம் | + | + | 02 |
| 4 | மாதர் மேல் இச்சை | + | + | 02 |
| 5 | சகல கலை ஞானத்தை அறியும் தன்மை | + | + | 02 |
| 6 | யோகப் பயிற்சி | + | + | 02 |
| 7 | புளிப்பு காரத்தில் இச்சை | + | + | 02 |
| 8 | ஸ்தூல சரீரம் | + | | 01 |
| 9 | உரத்த குரல் | + | | 01 |

ஸ்தூல சரீரம், உரத்த குரல் என்பன வைத்திய சிந்தாமணி எனும் நூலில் குறிப்படப்படாது சித்த மருத்துவ நோய்நாடல் நோய்முதல் நாடல் திரட்டு என்னும் நூலில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3.6. பித்த வாத பிரகிருதியின் இலட்சணங்கள்

ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட 12 நூல்களில் பித்தவாத தேகியின் 17 இலட்சணங்கள் 03 நூல்களில் இருந்து இனம் காணப்பட்டு அட்டவணை 08ல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 08 : பித்தவாத பிரகிருதி இலட்சணங்கள்**

| இலக்கம் | பித்த வாத பிரகிருதியின் **இலட்சணங்கள்** | சித்த மருத்துவ நோய்நாடல் நோய்முதல் நாடல் திரட்டு | பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம் | வைத்திய சிந்தாமணி | **இலட்சணங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|
| 1 | தேகம் வெண்மை / செம்மை | + | | + | 02 |
| 2 | சுகந்த வாசனைகளில் அதிக பிரியம் | + | | + | 02 |
| 3 | அறிவுடமை | + | | + | 02 |
| 4 | குயிலின் குரலை ஒத்த தொனி | + | | + | 02 |
| 5 | சிறுக்கிருமல் | + | | + | 02 |
| 6 | தேக வறட்சி | + | | + | 02 |
| 7 | புளிப்பு, கார சுவையில் விருப்பு | + | | + | 02 |
| 8 | தேகம் பொது நிறம் | | + | | 01 |
| 9 | நிறைவான குணம், கிருபை | | + | | 01 |
| 10 | நேர்மை | | + | | 01 |
| 11 | மறவான கனவு | | + | | 01 |
| 12 | அதிக புத்தி வாய் ஞானம் அதிகம் | | + | | 01 |
| 13 | குயில் போல வார்த்தை | | + | | 01 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 | துறவான உடல் | | + | | 01 |
| 15 | வரட்சைப் பசி | | + | | 01 |
| 16 | பொறுமை | | + | | 01 |
| 17 | புளிப்பு அதிகமுண்ணல் | | + | | 01 |

தேகம் பொது நிறம், நிறைவான குணம், கிருபை, நேர்மை, மறவான கனவு ,அதிக புத்தி வாய் ஞானம் அதிகம், குயில் போல வார்த்தை, துறவான உடல், வரட்சைப் பசி,பொறுமை,புளிப்பு அதிகமுண்ணல் ஆகியன சித்த மருத்துவ நோய் நாடல் நோய் முதல் நாடல் திரட்டு, வைத்திய சிந்தாமணி ஆகிய நூல்களில் குறிப்பிடப்படாது பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரத்தில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3.7. பித்த ஐய பிரகிருதியின் இலட்சணங்கள்

ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட 12 நூல்களில் பித்தஜய தேகியின் 10 இலட்சணங்கள் 03 நூல்களில் இருந்து இனம் காணப்பட்டு அட்டவணை 09ல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 09 : பித்த ஐய பிரகிருதி இலட்சணங்கள்**

| இலக்கம் | பித்த ஐய பிரகிருதி **இலட்சணங்கள்** | சித்த மருத்துவ நோய்நாடல் நோய்முதல் நாடல் திரட்டு | பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம் | வைத்திய சிந்தாமணி | **இலட்சணங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|---|
| 1 | தேகம் செண்பகப் பூ நிறம் | + | + | + | 03 |
| 2 | அளவு கடந்த மோகம் | + | + | + | 03 |
| 3 | இனிமையான குரலோசை | + | + | + | 03 |
| 4 | தர்ம சிந்தனை | + | + | + | 03 |
| 5 | கற்றோரை ஆதரிக்கும் நல்லெண்ணம் | + | | + | 02 |
| 6 | நடுநிலையான யோகாப்பியாசம் | + | | + | 02 |
| 7 | புளிப்பு இனிப்பு சுவையுள்ள பண்டங்களில் விருப்பு | + | + | | 02 |
| 8 | மனத்திடம் | | + | | 01 |
| 9 | நல்லறிவு, கற்கை | | + | | 01 |
| 10 | முதியோரைப் பேணல் | | + | | 01 |

கற்றோரை ஆதரிக்கும் நல்லெண்ணம், நடுநிலையான யோகாப்பியாசம் ஆகிய இலட்சணங்கள் பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம் எனும் நூலில் குறிப்பிடப்படாது சித்த மருத்துவ நோய்நாடல் நோய்முதல் நாடல் திரட்டு, வைத்திய சிந்தாமணி ஆகிய இரண்டு நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் புளிப்பு இனிப்பு சுவையுள்ள பண்டங்களில் விருப்பானது வைத்திய சிந்தாமணி என்னும் நூலில் குறிப்பிடப்படாது சித்த மருத்துவ நோய்நாடல் நோய்முதல் நாடல் திரட்டு, பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம் ஆகிய இரண்டு நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் மனத்திடம், நல்லறிவு, கற்கை , முதியோரைப் பேணல் ஆகிய இலட்சணங்கள சித்த மருத்துவ நோய்நாடல் நோய்முதல் நாடல் திரட்டு, வைத்திய சிந்தாமணி என்னும் நூல்களில் குறிப்பிடப்படாது பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம் என்னும் நூலில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

### 3.8. ஐய பித்த பிரகிருதியின் இலட்சணங்கள்

ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட 12 நூல்களில் ஐயபித்த தேகியின் 09 இலட்சணங்கள் 03 நூல்களில் இருந்து இனம் காணப்பட்டு அட்டவணை 10ல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 10 : ஐய பித்த பிரகிருதி இலட்சணங்கள்**

| இலக்கம் | ஐய பித்த பிரகிருதி இலட்சணங்கள் | சித்த மருத்துவ நோய்நாடல் நோய்முதல் நாடல் திரட்டு | பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம் | வைத்திய சிந்தாமணி | ஜீவரக்ஷாமிர்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | வெடிப்பான குரலோசை | + | + | + | 03 |
| 2. | சத்திய நெறி | + | + | + | 03 |
| 3. | இனிப்பு, புளிப்பு, சுவையில் இச்சை | + | + | + | 03 |
| 4. | தேகம் சிவப்பு / பசுமை நிறம் | + | | + | 02 |
| 5. | பெண் வசியம் | + | | + | 02 |
| 6. | புகழ்ச்சி | + | + | | 02 |
| 7. | தைரியம், வீரம் | + | + | | 02 |
| 8. | மெய் ரோமம் சிவப்பு | | + | + | 02 |
| 9. | கோரோசனை நிற மேனி | | + | | 01 |

தேகம் சிவப்பு / பசுமை நிறம், பெண் வசியம் ஆகிய இலட்சணங்கள் பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம் எனும் நூலில் குறிப்படப்படாது சித்த மருத்துவ நோய்நாடல் நோய்முதல் நாடல் திரட்டு, வைத்திய சிந்தாமணி ஆகிய 02 நூல்களிலும் புகழ்ச்சி, தைரியம், வீரம் ஆகிய இலட்சணங்கள் வைத்திய சிந்தாமணி என்னும் நூலில் குறிப்பிடப்படாது பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம், சித்த மருத்துவ நோய்நாடல் நோய்முதல் நாடல் திரட்டு ஆகிய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் மெய் ரோமம் சிவப்பானது வைத்திய சிந்தாமணி, பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம் ஆகிய நூல்களிலும் கோரோசனை நிற மேனி பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம், என்னும் நூலிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 3.9. ஐய வாத பிரகிருதியின் இலட்சணங்கள்

ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட 12 நூல்களில் ஐயவாத தேகியின் 10 இலட்சணங்கள் 03 நூல்களில் இருந்து இனம் காணப்பட்டு அட்டவணை 11ல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 11 : ஐய வாத பிரகிருதி இலட்சணங்கள்**

| இலக்கம் | ஐய வாத பிரகிருதி இலட்சணங்கள் | சித்த மருத்துவ நோய்நாடல் நோய்முதல் நாடல் திரட்டு | பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம் | வைத்திய சிந்தாமணி | இலட்சணங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1. | தேகம் தடிப்பு | + | + | + | 03 |
| 2. | தேகம் கறுப்பு செம்மை | + | + | + | 03 |
| 3. | போகப் பிரியம் | + | + | + | 03 |
| 4. | பல கலைகளை ஆராய்தல் | + | + | + | 03 |
| 5. | பெரியோரை ஆதரித்தல் | + | + | + | 03 |
| 6. | தைரியம், வீரம் | + | + | + | 03 |
| 7. | புளிப்பு, கார சுவைகளில் விருப்பம் | + | + | + | 03 |
| 8. | யோகம் | | + | | 01 |
| 9. | மறைநூல் ஆய்தல் | | + | | 01 |
| 10. | யோக சாதனையைக் கற்றறிதல் | + | | | 01 |

யோக சாதனையைக் கற்றறிதல் பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம், வைத்திய சிந்தாமணி ஆகிய நூல்களில் குறிப்பிடப்படாது சித்த மருத்துவ நோய்நாடல் நோய்முதல் நாடல் திரட்டு என்னும் நூலிலும்நூலிலும் யோகம், மறைநூல் ஆய்தல் ஆகியன சித்த மருத்துவ நோய்நாடல் நோய்முதல் நாடல் திரட்டு, வைத்திய சிந்தாமணி என்னும் நூல்களில் குறிப்படப்படாது பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரத்தில் மட்டும் குறிப்படப்பட்டுள்ளது.

### 3.10. தொந்த பிரகிருதியின் இலட்சணங்கள்

ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட 12 நூல்களில் தொந்த தேகியின் 9 இலட்சணங்கள் 02 நூல்களில் இருந்து இனம் காணப்பட்டு அட்டவணை 12ல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 12 : தொந்த பிரகிருதி இலட்சணங்கள்**

| இலக்கம் | தொந்த பிரகிருதியின் இலட்சணங்கள் | அங்காதிபாதம் எனும் சித்த வைத்திய அரிச்சுவடி | சித்த மருத்துவாங்க சுருக்கம் | இலட்சணங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | இரு கலப்பு நிறத் தேகம் | | + | 01 |
| 2. | கலப்பு குரல் ஒலி | | + | 01 |
| 3. | தூக்கம் உண்டாகும் | + | | 01 |
| 4. | அறிவு கெடும் | + | | 01 |
| 5. | உடற் சூடு | + | | 01 |
| 6. | வியர்வை | + | | 01 |
| 7. | கை, கால் விறைப்பு | + | | 01 |
| 8. | காதடைப்பு | + | | 01 |
| 9. | சுரம் | + | | 01 |

இரு கலப்பு நிறத் தேகம் , கலப்பு குரல் ஒலி என்பன அங்காதிபாதம் எனும் சித்த வைத்திய அரிச்சுவடியில் குறிப்பிடப்படாது சித்த மருத்துவாங்க சுருக்கம் என்னும் நூலில் குறிப்படப்பட்டுள்ளதுடன் தூக்கம் உண்டாகும், அறிவு கெடும் ,உடற் சூடு, வியர்வை , கை, கால் விறைப்பு, காதடைப்பு, சுரம் ஆகியன சித்த மருத்துவாங்க சுருக்கம் என்னும் நூலில் குறிப்பிடப்படாது அங்காதிபாதம் எனும் சித்த வைத்திய அரிச்சுவடி என்னும் நூலில் மட்டுமே குறிப்படப்பட்டுள்ளது.

### 3.11. சன்னிபாத பிரகிருதியின் இலட்சணங்கள்

ஆய்விற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட 12 நூல்களில் சன்னிபாத பிரகிருதியின் இலட்சணமாக தேகம் பல நிறம் என சித்த மருத்துவாங்க சுருக்கத்தில் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது இனம் காணப்பட்டு அட்டவணை 13ல் காட்டப்பட்டுள்ளது

**அட்டவணை 13 : சன்னிபாத பிரகிருதி இலட்சணங்கள்**

| இலக்கம் | சன்னிபாத பிரகிருதி இலட்சணங்கள் | சித்த மருத்துவாங்க சுருக்கம் | இலட்சணங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | தேகம் பலநிறம் | + | 01 |

# 04. அஷ்டவித பரீட்சைக்கும் சரீர இலட்சணத்திற்கும் இடையிலான தொடர்பு

வைத்திய சிந்தாமணி எனும் காலத்தால் முற்பட்ட சித்தமருத்துவ நூலில் அஷ்டவித பரீட்சைக்கும் சரீர இலட்சணத்திற்கும் இடையிலான தொடர்பானது குறிப்பிடப்பட்டுள்ளது.

அஷ்டவித பரீட்சைகளாக ,

- ❖ சரீர இலட்சணம்
- ❖ நிறப் பரீட்சை
- ❖ வசனப்பரீட்சை
- ❖ நேத்திரப்பரீட்சை
- ❖ மலப்பரீட்சை
- ❖ சலப்பரீட்சை
- ❖ நாவின்பரீட்சை
- ❖ தந்தப்பரீட்சை

குறிப்பிடப்பட்டுள்ளன.

## அட்டவணை 14 : அஷ்டவித பரீட்சைக்கும் சரீர இலட்சணத்திற்கும் இடையிலான தொடர்பு

| அஷ்ட விதி பரீட்சை | | வாத சரீரம் | பித்த சரீரம் | சிலேத்தும சரீரம் | தொந்தசரீரம் |
|---|---|---|---|---|---|
| சரீர லட்சணம் | நாடி | மெதுவாக | விரைவாக | அதிக வெருட்சி ,துர்பலம் | பலவித குணம் |
| | ஸ்பரிசம் | பெரும்பாலும் குளிர் சில இடங்களில் உஷ்ணம் | உஷ்ணம் | குளிர் | பலவித குணம் |
| நிறப் பரீட்சை | | கருமை | மஞ்சள் | வெளுப்பு | பல நிறம் |
| வசனப்பரீட்சை | | சாந்தம் | வலுத்திருத்தல் | இளைத்த தொனி | பல விதம் |
| நேத்திரப்பரீட்சை | | கறுத்து கண்ணீர் பாயும் | பச்சையாக சிவந்து காட்டும் | வெளுத்து பீளை சேரும் | - |
| மலப்பரீட்சை | | கறுப்பு | மஞ்சள்/ சிவப்பு | வெளுப்பு | பல வர்ணம் |
| சலப்பரீட்சை | | தெளிந்த வெண்ணிறம் | மஞ்சள் | கலங்கல்+ நுரை | பல நிறம் |
| நாவின்பரீட்சை | | கறுத்து முள் பாய்ந்து வெடித்திருக்கும் | மஞ்சளாக சிவந்திருக்கும் | வெளுப்பாக நீரூறும் | பல விதம் |
| தந்தப்பரீட்சை | | கறுப்பு+ சாம்பல் | மஞ்சள் | வெளுப்பு | பல நிறம் |

**அட்டவணை 15 : பிரகிருதி மதிப்பீடு**

| | வாதம் | பித்தம் | கபம் |
|---|---|---|---|
| **A. உடல்** | | | |
| **நிறம்** | | | |
| கருமை | | | |
| வெண்மை | | | |
| செம்மை | | | |
| பொதுநிறம் | | | |
| **தன்மை** | | | |
| உயர்ந்த | | | |
| மெலிவான | | | |
| தடிப்பான | | | |
| கொழுமை | | | |
| கடினம் | | | |
| **அவயவங்கள்** | | | |
| நீண்ட கால்,கை, | | | |
| பருத்த அடித்தொடை, | | | |
| பரந்த நெற்றி | | | |
| கீல்களில் நெட்டியிடல் | | | |
| உள்ளங்கை, உள்ளங்கால் மஞ்சள் | | | |
| **முகம்** | | | |
| கறுப்பு மச்சம் | | | |
| முகப்பரு | | | |
| **கேசம்** | | | |
| சிவப்பு | | | |
| கறுப்பு | | | |
| அதிகளவு | | | |
| சொற்பம் | | | |
| **தலைமயிர்** | | | |

| | | | |
|---|---|---|---|
| செழிப்பானது | | | |
| வாலிப வயதில் நரை | | | |
| கறுத்து முனை பிளந்து | | | |
| **கண்** | | | |
| வெண்மை கலந்த கண் | | | |
| கடைக்கண் சிவத்தல் | | | |
| அகன்று நீண்ட கண்கள் | | | |
| **இமை** | | | |
| தடித்த | | | |
| மெல்லிய | | | |
| **தோல்** | | | |
| சருமம் சுருங்கி திரைதல் | | | |

| **B. இயல்புகள்** | | | |
|---|---|---|---|
| **நடை** - மதயானை | | | |
| **பேச்சு** | | | |
| உயர்ந்த ஒலி | | | |
| கலப்பு குரல் ஒலி | | | |
| குயில் போன்ற குரலோசை | | | |
| **வார்த்தை** | | | |
| இதமான வார்த்தை | | | |
| கடிந்த மொழி | | | |
| தெளிவான வார்த்தை | | | |
| பொய்யும் மெய்யும் கலந்து பேசுதல் | | | |
| மதமிஞ்சிப் பேசுதல் | | | |
| **பசி** | | | |
| அதிகம் | | | |
| குறைவு | | | |
| மந்தம் | | | |
| **சுவை** | | | |
| தித்திப்பு | | | |
| புளிப்பு | | | |
| உப்பு | | | |
| கைப்பு | | | |
| கார்ப்பு | | | |
| துவர்ப்பு | | | |
| **உண்டி** | | | |
| அற்ப | | | |
| அதிகம் | | | |
| **சித்தம்** | | | |
| சிறப்பு | | | |
| சபல | | | |
| **கனவு** | | | |
| நீரோடை | | | |
| ஆகாயத்தில் சஞ்சரித்தல் | | | |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| **தூக்கம்** | | | |
| அரைக்கண் மூடிய தூக்கம் | | | |
| சொற்ப நித்திரை | | | |
| **கற்றல்** | | | |
| பல கலை கற்றல் | | | |
| **உணர்வுகள்** | | | |
| காதல் | | | |
| சிற்றின்பம் | | | |
| அற்ப காமம் | | | |
| அளவு கடந்த போகம் | | | |
| வீரம் | | | |
| புகழ்ச்சி | | | |
| மனக்குழப்பம் | | | |
| முன் கோபம் | | | |
| வெகு ரோஷம் | | | |
| பொறுமை | | | |
| நல்லறிவு | | | |
| தர்மசிந்தனை | | | |
| முதியோர் பேணல் | | | |
| மனத்திடம் | | | |

| | | | |
|---|---|---|---|
| **C. அஷ்டவித பரீட்சை** | | | |
| 1. சரீர இலட்சணம் | | | |
| a. நாடி | | | |
| மெதுவாக | | | |
| விரைவாக | | | |
| அதிக வெருட்சி | | | |
| பலவிதகுணம் | | | |
| b. ஸ்பரிசம் | | | |
| உஷ்ணம் | | | |
| குளிர் | | | |
| பலவித குணம் | | | |
| 2. நிறப்பரீட்சை | | | |
| கருமை | | | |
| மஞ்சல் | | | |
| வெளுப்பு | | | |
| பலநிறம் | | | |
| 3. வசனப்பரீட்சை | | | |
| சாந்தம் | | | |
| வலுத்திருத்தல் | | | |
| இளைத்த தொனி | | | |
| பலவிதம் | | | |
| 4. நேத்திரப்பரீட்சை | | | |
| கறுத்துக்கண்ணீர் வரும் | | | |
| சிவந்து காணப்படும் | | | |
| வெளுத்துப் பீளைசாரும் | | | |
| 5. மலப்பரீட்சை | | | |
| கறுப்பு | | | |
| சிவப்பு மஞ்சல் | | | |
| வெளுப்பு | | | |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| 6. சலப்பரீட்சை | | | |
| தெளிந்த வெண்ணிறம் | | | |
| மஞ்சள் | | | |
| 7. நாவின் பரீட்சை | | | |
| கறுத்து முள்பாய்ந்து வெடித்தல் | | | |
| வெளுத்து நீரூறும் | | | |
| மஞ்சள் நிறம் | | | |
| 8. தந்தப்பரீட்சை | | | |
| கறுப்பு + சாம்பல் | | | |
| மஞ்சள் | | | |
| வெளுப்பு | | | |

# தொகுப்புரை

தேகி இலக்கணத்திற்கு மறு பெயர்களாக பிரகிருதி, சரீரக்குணம், தேகி இலக்கணம், சரீர அமைப்பு, சரீரக் கூறு, தேகக்கூறு எனப் பல பெயர்கள் நூல்களில் கூறப்பட்டுள்ளது. இவற்றைப் பார்க்கையில் ஆயுள் வேத நூல்களில் பிரகிருதி என்றும் சித்த ஆயுள் வேத நூல்களில் ஏனைய பெயர்களும் கூறப்பட்டுள்ளது. இதில் அகத்தியரே சித்த மருத்துவத்தின் தந்தையாகக் கருதப்படுவதனாலும் அகத்தியர் இரண்டாயிரம் ஒரு மூலநூலாக உள்ளதாலும் இன்நூலிற்கு அகத்தியர் இரண்டாயிரத்தில் கூறியபடி சரீர அமைப்பு, பிரகிருதி, சரீரக்கூறு, தேகக்கூறு என இருந்த போதும் பிரகிருதி என்ற சொல் வடமொழியாய் இருப்பதனால் சரீரத் தலைப்பிடுதல் பொருத்தமானதாகும்.

கர்ப்ப உற்பத்திக்காலத்தில் சுரோணிதம், சுக்கிலம் இவற்றின் வாத, பித்த, கபங்கள் தங்களுக்குரிய மாத்திரையின் படி 1: ½: ¼ இணைந்தால் உத்தமப்பிரகிருதி எனக் கூறப்படுகின்றது. வாதம் கூடி ஏற்பட்டால் வாதப்பிரகிருதியாகவும் பித்தம் கூடி ஏற்பட்டால் பித்தப் பிரகிருதியாகவும் கபம் கூடி ஏற்பட்டால் கப பிரகிருதியாகவும் கொள்ளப்படும்.

வகைகளைப் பார்க்கையில் வாத, பித்த, கப பிரகிருதி ஆய்விற்கு எடுக்கப்பட்ட அனைத்து நூல்களிலும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் ஆதி நூல்களான பதினெண் சித்தர்கள் நாடி சாஸ்திரம், வைத்திய சிந்தாமணி ஆகிய இரு நூல்களிலும் தொந்தப் பிரகிருதிகள் (வாத பித்த, வாத கப, பித்த வாத, பித்த கப, கப பித்த, கப வாத பிரகிருதி) கூறப்பட்டிருக்கின்றன. இந்நூலில் குறிப்பிடப்பட்டதை சித்த மருத்துவ நோய்நாடல் நோய்முதல் நாடல் திரட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ஆதார நூலில் குறிப்பிடப்படவில்லை.

தேகப்பிரகிருதியின் இலட்சணங்கள் வாத, பித்த , கபத்தின் குணங்களோடு ஒப்பிட்டு விளங்கக்கூடியதாக உள்ளது. 10 நூல்களின் படி வாத தேகியின் இலட்சணங்களாக 46 இலட்சணங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இது நூலாய்வில் இருந்து எடுக்கப்பட்ட முக்கிய விடையமாகும். வாத தேகியின் இலட்சணங்களைப் பார்க்கையில் தேகம் கருமை, தேகம் மெலிவு, தேக வறட்சி, தேகத்தில் வாய்வுப் பெருக்கம், தேக உளைச்சல், தலைமுடி சொற்பம், அதிகம் பேசும்தன்மை , உஷ்ணத்தில் பிரியம், சீதளத்தில் விரோதம், உயரமானவர்கள், தெளிவான வார்த்தை பேசுவோர் என்பனவாகும் (அட்டவணை 04). வாதத்தின் குணங்களை வாத தேகியின் இலட்சணங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடியதாக உள்ளது. உதாரணமாக வறட்சி என்னும் இயல்பினை உடல் வெப்பம், தேக வறட்சி, தலைமயிர் குறைவு, தலைமயிர் முனை வெடிப்பு எனும் இலட்சணங்களுடனும் சீதம் எனும் இயல்பினை உஷ்ணத்தில் விருப்பு, சீதள வஸ்துவில் விரோதம் ஆகிய இலட்சணங்களுடனும் சலனம் எனும் இயல்பை சுறுசுறுப்பு, அரைக்கண் மூடிய சொற்ப நித்திரை ஆகிய இலட்சணங்களுடனும் வாதத்தைக் கூட்டும் சுவையான கைப்பு, கார்ப்பு, துவர்ப்பு இயல்புடன் துவர்ப்பு சுவை அதிகமுண்ணல் என்னும் இலட்சணத்துடனும் கருமை நிறம் என்னும் இயல்பானது உடல் கருமை என்னும் இலட்சணத்துடனும் ஒப்பிடக்கூடியதாக உள்ளது. இதே போல பித்த, கப இயல்பினையும் பித்த, கப தேகியின் இலட்சணங்களுடன் பகுத்து ஆராயமுடியும்.

வைத்திய சிந்தாமணி எனும் காலத்தால் முற்பட்ட நூலில் மாத்திரம் சரீர அமைப்பிற்கும் அஷ்ட வித சிகிச்சைக்கும் இடையிலான தொடர்பு வெகு தெளிவாக விளங்கக்கூடியவாறு விஞ்ஞான ரீதியாகக் கூறப்பட்டுள்ளது. இதை அடிப்படையாக வைத்தே ஒரு மனிதனுடைய பிரகிருதியை தெளிவாகக் கூறமுடியும். இப் பரீட்சை முறைகளை வைத்து நோயாளி என்ன

நோயில் பாதிக்கப்பட்டுள்ளர் என்பதையும் கணிக்க முடியும்.

இதை அடிப்படையாக வைத்து சிகிச்சை முறைகளையும் தீர்மானிக்க முடியும். எனவே தேக அமைப்பு, சரீர அமைப்பு என்பது சித்த மருத்துவத்தில் எவ்வளவு முக்கியமானது என்பதை இந் நூலாய்வில் இருந்து அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

## உசாத்துணை நூல்கள்


1) வெங்கட்ராஜன், S. அகத்தியர் 2000. 6ம் பதிப்பு. தஞ்சாவூர்: சரஸ்வதி மஹால் நூலகம், 2006. பக். 35-36.
2) அகத்தியமுனிவர். அகஸ்தியர் வயித்திய காவியம் (1500 பாடல்). [s.l.]: [s.n.], 1934. பக். 05.
3) விநாயகமூர்த்தி, வை. க. அங்காதிபாதம் என்னும் சித்தவைத்திய அரிச்சுவடி. [s.l.]: [s.n.], [n.d.]. பக். 113–117.
4) ஸ்ரீராமதேசிகம், S.N. அஷ்டாங்கசங்கிரகம். 1ம் அத்தியாயம். [s.l.]: [s.n.], 1984. பக். 04-05.
5) உத்தமராஜன், க.சு. சித்த மருத்துவாங்கச் சுருக்கம். சென்னை: இந்தியமருத்துவம் - ஓமியோபதித்துறை, 2010. பக். 169–178 & 490–503.
6) சண்முகவேலு, ம. சித்த மருத்துவ நோய் நாடல், நோய்முதல்நாடல் திரட்டு (பாகம் 01). [s.l.]: [s.n.], [n.d.]. பக். 249–253.
7) வெங்கட்ராஜன், S. தன்வந்திரிவைத்தியம் (1ம் பாகம்). தஞ்சாவூர்: தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரஸ்வதி மஹால் நூலகம், 1962. பக். 16-17.
8) சிதம்பர நாத வைத்தியர். நாடி தர்ப்பணம். 2ம் பதிப்பு. யாழ்ப்பாணம்: சுதேச மருத்துவ திணைக்களம் (வட மாகாணம்), 2011. பக். 15-16.
9) துரைஸ்வாமி ஐயங்கார், மோ. சார்ங்கதர ஸம்ஹிதை. 6ம் அத்தியாயம் (ரோக நிதானம்). [s.l.]: [s.n.], 1950. பக். 24.
10) கண்ணுச்சாமிபிள்ளை, சி. சிகிச்சாரத்னதீபம், 2ம் பாகமாகிய வைத்திய சிந்தாமணி. 7ம் பதிப்பு. [s.l.]: இரத்தினநாயகர் அன்ற் சன்ஸ், 1984. பக். 16-17.
11) பதினெண் சித்தர்கள் அருளிச் செய்த நாடி சாஸ்திரம். [s.l.]: இரத்தினநாயகர் அன்ற் சன்ஸ், [n.d.]. பக். 72-73.
12) சுப்பிரமணிய பண்டிதர், ஜீவரட்ஷாமிர்தம். [s.l.]: [s.n.], [n.d.]. பக். எ,அ,கூ.